**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 14.10.2024 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வெளிநாடுகளில் வேலைக்கு செல்லும் இந்தியர்களின் உரிமைகளையும், கண்ணியத்தையும் பாதுகாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறி உள்ளார்.
- தரமான பொருட்களை வழங்கும் நாடாக, உலக அளவில் இந்தியாவிற்கு அங்கீகாரம் பெற்று தருவதே அரசின் நோக்கம் என்று, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்
- புதுச்சேரியில் கோவில் நில மோசடிகளைத் தடுக்கும் வகையில், சம்பந்தப்பட்ட துறைகள் கூடுதல் விழிப்புடன் செயல்பட வேண்டுமென துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் அறிவுறுத்தி உள்ளார்.
- புதுச்சேரியில் மழை நிலவரங்களை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் குறித்து இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

***<u>ஜெய்சங்கர்</u>***

வெளிநாடுகளில் வேலைக்கு செல்லும் இந்தியர்களுக்கான, eMigrate இணையதளத்தின் மேம்படுத்திய 2-ஆம் பதிப்பையும், மொபைல் செயலியையும், வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் புதுடெல்லியில் இன்று வெளியிட்டார். அன்னிய மண்ணில் இந்தியத் தொழிலாளர்களின் உரிமைகளையும், கண்ணியத்தையும் பாதுகாப்பதில்,

அரசுக்குள்ள உறுதிப்பாட்டின் அடையாளமாகவே, புதுப்பிக்கப்பட்ட இணையதளம் அமைந்திருப்பதாக அவர் கூறினார். நாடுகளுக்கு இடையே தொழிலாளர்களின் முறையான, பாதுகாப்பான இடப் பெயர்வை உறுதிப்படுத்த, 2030-ஆம் ஆண்டிற்கான நீடித்த வளர்ச்சி இலக்குகளில் முக்கியத் துவம் அளிக்கப் பட்டுள்ளதாகவும், புதுப்பிக்கப்பட்ட eMigrate இணையதளம் இந்த இலக்குகளுக்கு ஏற்ப அமைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மத்திய அரசின் இ-மைக்ரேட் இணையதளத்தில், வெளிநாடுகளைச் சேர்ந்த வேலை வழங்குவோர், சுமார் 2 லட்சத்து 81 ஆயிரம் பேர், ஏற்கனவே பதிவு பெற்றுள்ளதும், பதிவு பெற்ற நிறுவனங்களில் வேலைக்குச் செல்வதால், தொழிலாளர்களின் பாதுகாப்பு உறுதியாகும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

***<u>தரநிலைகள் தினம்</u>***

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் சுமார் 732 உற்பத்தி பொருட்களின் தரம் தொடர்பாக, 150-க்கும் மேற்பட்ட தரக் கட்டுப்பாட்டு ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார். இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, உலக தரநிலைகள் தின விழாவில் உரையாற்றிய அவர் தேசிய அளவிலான தர நிலைகளின் அமலாக்கத்திற்கு அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாக கூறினார். இந்தியப் பொருட்களின் தரத்தை உலக தரத்திற்கு உயர்த்தி தரமான பொருட்களை வழங்கும் நாடாக இந்தியாவிற்கு அங்கீகாரம் பெற்று தருவதே பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வை என்று அமைச்சர் தெரிவித்தார். நாட்டில் நம்பகமான, பாதுகாப்பான, தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை, மக்களுக்கு கிடைக்கச் செய்வதில், அரசு மிகுந்த உறுதி பூண்டுள்ளதாக அவர் கூறினார். பின்னார் ஜோஷி செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்திய தர நிர்ணய ஆணையத்தின் BIS தர முத்திரையுடன் கூடிய பொருட்களையே

மக்கள் பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதிப்படுத்துவதில் தர நிலைகளின் பங்கு மிக முக்கியமானது என்று, மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை இணை அமைச்சர் திரு பி எல் வர்மா கூறினார். பொருட்கள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதில் அரசுக்கும், தொழில் துறையினர் மற்றும் சிவில் சமூகத்தினருக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேம்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

***<u>மின்சாரம்-கார்பன்</u>***

மின்சார உற்பத்தி துறையில், நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய நீடித்த வளர்ச்சியை எட்டுவதில், பருவநிலை மாற்றத்தால் சவால்கள் ஏற்படுவதாக மத்திய மின்சாரத் துறை அமைச்சர் திரு மனோகர்லால் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் மத்திய மின்சார ஆணையத்தின் கூட்டு சிந்தனை மாநாட்டில் உரையாற்றிய அவர் இந்தியாவில், பெருகி வரும் மின்சாரத் தேவைகளை பூர்த்தி செய்யும் அதேவேளை, 2030-ஆம் ஆண்டிற்குள் நாட்டின் கார்பன் வெளியீட்டை 1 லட்சம் டன்னாக குறைக்க வேண்டியதும் அவசியம் என்றார். நிகர கார்பன் வெளியீட்டை 2070-ஆம் ஆண்டிற்குள், பூஜ்யமாக குறைக்கும் இலக்கை இந்தியா எட்ட முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

<u>உத்தரபிரதேஷ்</u>

உத்தரபிரதேசத்தில் நேற்று பகராய்ச் மாவட்டம் ஹர்தி பகுதியில் நேற்று, துர்கா சிலை விசர்ஜன ஊர்வலத்தின் போது நிகழ்ந்த வன்முறையில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது. மாநில உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் திரு தீபக்குமார், சட்டம்-ஒழுங்கு பிரிவு கூடுதல் தலைமை இயக்குநர் திரு அமிதாப் யாஷ் ஆகியோர் சம்பந்தப்பட்ட பகுதியில் முகாமிட்டு நிலவரங்களை கண்காணித்து வருகின்றனர். சம்பந்தப்பட்ட பகுதியில்

கூடுதல் போலீசார் சட்டம்-ஒழுங்கை பராமரிக்கும் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும், நிலவரங்கள் தற்போது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் மாநில அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நிலவரங்கள் குறித்து முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் இன்று உயர்நிலைக் கூட்டம் நடத்தினார். வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தி உள்ளார். ஹர்தி காவல் நிலைய பொறுப்பு அதிகாரி உட்பட 2 காவல் துறை அதிகாரிகள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். துர்கா சிலை ஊர்வலத்தின் போது துப்பாக்கி சூட்டில் ஈடுபட்டதாக கூறப்படும் நபர் ஒருவரை போலீசார் கைது செய்துள்ளனர். மேலும் 25 முதல் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மாநில காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இருதரப்பினருக்கும் இடையிலான மோதலில் மேலும் சிலர் காயம் அடைந்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

***<u>பணவீக்கம்</u>***

மொத்த விலைகளின் அடிப்படையிலான பண வீக்கம் கடந்த செப்டம்பர் மாதத்தில், 1.84 சதவிகிதமாக, சற்றே அதிகரித்துள்ளது. இது அதற்கு முந்தைய மாதத்தில், 1.31 சதவிகிதமாக இருந்தது. செப்டம்பர் மாதத்தில் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்ததே பண வீக்கம் அதிகரிக்க காரணம் என்று மத்திய தொழில் வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. அதேசமயம் கடந்த செப்டம்பர் மாதத்தில் உற்பத்தி பொருட்களின் விலை சற்று குறைந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

***<u>காரைக்கால்-கோவில் நிலம் (16)</u>***

காரைக்கால் கோவில்பத்து ஸ்ரீ பாரதீஸ்வரர் கோவில் நில மோசடி விவகாரம் மட்டுமின்றி இத்தகைய எந்த ஒரு கோவில் நில மோசடிகளையும் பொருத்துக் கொள்ள இயலாது என்று துணை நிலை ஆளுநர்

திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார். கோவில் நில மோசடிகளில் தீவிர விசாரணை மேற்கொண்டு, மோசடியில் ஈடுபட்ட நபர்களை அடையாளம் காணவும் நிலங்களை மீட்டு கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தி உள்ளார். கோவில் சொத்துக்களை முழுமையாக கணக்கெடுத்து முறையாக பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இதுபோன்ற விவகாரங்கள் இனியும் நடக்காத வகையில் சம்பந்தப்பட்ட துறைகள் கூடுதல் கண்காணிப்புடன் செயல்படவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நில மோசடிகளை மக்களே அடையாளம் கண்டு வெளிப்படுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கி உள்ளார். கோவில்பத்து நிலமோசடி விவகாரம் பற்றிய வழக்கு விசாரணைகளையும், அதன் விவரங்களையும் துணை நிலை ஆளுநர் கூர்ந்து கவனித்து வருவதாக ராஜ்நிவாஸ் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

__□ழை-1 (18)__

தென்கிழக்கு வங்க கடலில் இன்று காலை காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. இது மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை 15-ஆம் தேதி வாக்கில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்று, தெற்கு வங்க கடலின் மத்தியப் பகுதிகளில் நிலவக் கூடும் என்றும், அதற்கடுத்த 2 நாட்களில், வடதமிழகம், புதுச்சேரி மற்றும் அதனை ஒட்டிய தெற்கு ஆந்திர கடலோரப் பகுதிகளை நோக்கி நகரக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுஅல்லாது தமிழகப் பகுதிகள் மற்றும் தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளில் 2 வளிமண்டல மேலடுக்கு சுழற்சிகள் நிலவுகின்றன. அடுத்த 4 நாட்களில் தென்மேற்கு பருவமழை விலகி, தென்னிந்தியப் பகுதிகளில், வரும் 16-17-ஆம் தேதி வாக்கில், வடகிழக்கு பருவமழை தொடங்கக் கூடும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. இதன் காரணமாக தமிழகத்திலும், புதுச்சேரி-

காரைக்கால் பகுதிகளிலும் பரவலாக மழை இருக்கும் என, வரும் 20-ஆம் தேதி வரையிலான வானிலை முன் அறிவிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இன்றைய தினம், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழைக்கும், கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளைய தினம் வேலூர், திருப்பத்தூர், தர்மபுரி, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழையும், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் மிக கனமழையும், நாகை, திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் காரைக்காலில் ஓரிரு இடங்களில் அதிகனமழையும் எதிர்பார்க்கப் படுகிறது. மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் காரைக்காலில் 8 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில் 1 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது. கனமழை எச்சரிக்கை காரணமாக சென்னை உட்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும், புதுச்சேரி காரைக்கால் பகுதிகளிலும் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் உள்ள, அனைத்து பள்ளி-கல்லூரிகளுக்கும் நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

*பருவ□ழை-ஆலோசனை-1(15)*

புதுச்சேரியில் வடகிழக்கு பருவமழை நிலவரங்களை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாடுகள் குறித்து இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். துறை வாரியாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கைப் பணிகள் குறித்து அவர் கேட்டறிந்தார். அனைத்து நீர் நிலைகள், வாய்க்கால்கள் மற்றும் நீர்வழிப் பாதைகளை தூர்வாரவும், நிவாரண மையங்களை நல்ல நிலையில் பராமரிக்கவும், அத்தியாவசிய மருந்துகள் மற்றும் நிவாரணப் பணிகளுக்கான உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்கவும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார். மழை பற்றிய வானிலை ஆய்வுத் துறையின் எச்சரிக்கை தகவல்களை மீனவர்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும் என்றும், கால்நடைகளுக்கு தடுப்பூசி போட வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும், அவர் வலியுறுத்தினார். அனைத்து அரசுத் துறைகளிலும் 24 மணி நேர கட்டுப்பாட்டு அறைகளைத் திறக்கவும், மீட்புப் பணிகளில் ஈடுபட அரசு சாரா அமைப்புகள் மற்றும் தன்னார்வலர்களைத் தயார் நிலையில் வைத்திருக்கவும் முதலமைச்சர் அறிவுறுத்தினார். சட்டப் பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், வளர்ச்சித் துறை ஆணையர் திரு ஆஷிஷ் மாதோவ்ராவ் மோரே மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், மற்றும், பொதுப் பணி, சுகாதாரம், உள்ளாட்சி உள்ளிட்ட துறைகளின் உயர் அதிகாரிகளும், நகராட்சி, கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர்களும் கலந்து கொண்டனர்.

*குலோத்துங்கன்-ஆய்வு*

புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில், உழவர்கரை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து, கிருஷ்ணாநகருக்கு திரும்பும் இடம் வரை, குழாய் பதிக்கும் பணிகளுக்காக சாலையோரம் தோண்டப்பட்ட பள்ளங்கள் சரியாக மூடப்படாததால், மழை நீர் தேங்கி விபத்துக்கள் ஏற்படுவதாக புகார்கள் எழுந்ததைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் அப்பகுதியை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணி முடிந்த இடங்களில், பள்ளங்களை விரைவாக சரிசெய்து, போக்குவரத்துக்கு உகந்த வகையில் சாலையை சீரமைக்க, ஒப்பந்ததாரர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது,

*காரைக்கால்-பால்*

காரைக்காலில் மானாம்பேட்டை ஒருங்கிணைந்த பால் உற்பத்தி மற்றும் விற்பனைக் குழுவின் முதல் கொள்முதல் மற்றும் விற்பனையை, மாவட்ட துணை ஆட்சியரும், வட்டார வளர்ச்சி அதிகாரியுமான திரு செந்தில் நாதன் இன்று தொடக்கி வைத்தார். ஊரக வளர்ச்சி துறை, ஊரக வளர்ச்சி முகமை, ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகம் சார்பாக, விழுதியூர் பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு மூலம் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

*நீதி□ன்றம்-□னு*

கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு, ரத்தம் உறைதல் போன்ற பக்கவிளைவுகள் ஏற்படுவதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு ஒன்றை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. பரபரப்பை ஏற்படுத்துவதே இம்மனுவின் நோக்கம் என்று தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான அமர்வு, இன்று தனது உத்தரவில் கூறியது. தூர்தர்ஷன் தொலைக்காட்சியில், சிந்தி மொழிக்கு, 24 மணி நேர தனி அலைவரிசை தொடக்க மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரும் மற்றொரு

மனுவையும் இன்று உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. வேறு வழிகளிலும், சிந்தி மொழியை பேணிக் காக்கலாம் என்று நீதிபதிகள் தங்களின் உத்தரவில் கூறினர்.